
# 8 நாட்டார் பாடல்கள்

## ஊஞ்சல் பாடல்கள்



1. ஆத்தை மறித்துக்கட்டி
அழகு சம்பா நான் விதைத்தேன்
குளத்தை மறித்துக்கட்டி
கொத்தமல்லி நான் விதைத்தேன்
குளத்துத் தண்ணீர் குறையக் குறைய
கொத்தமல்லி வாடுதையா
ஆத்துத் தண்ணீர் குறையக் குறைய
அழகு சம்பா வாடுதையா

(ஆத்தை)

2. உத்தி உத்தி ஊஞ்சல் உத்தி
ஊரெல்லாம் சேர்ந்து உத்தி
பக்கத்து வீட்டாரையும்
பாடச் சொல்லி சேர்ந்து உத்தி
கிறுகக் கிறுகக் கிட்டி வைத்து
கிழவனும் சேர்ந்து ஆட
கீழ்வானம் மேல் வானமாய்
கிழவியும் சேர்ந்து உத்தி

(உத்தி)

## காதல் பாடல்

1. கோடைக்குள் பூத்த கொடி மல்லிகைப் பூவை
கொத்துக் கொத்தாகத் தந்திடுவார்
மிச்சம் பிறகு வருமென்று - அவர்
முத்தம் ஒன்றும் தந்திடுவார்

2. கட்டிலில் அவர் படுத்திருப்பார்
தொட்டிலில் பிள்ளை நித்திரைதான்
பாலும் அடுப்பிலே பொங்கினாலும்
பண்பாக என்னுடன் நடந்திடுவார்

3. கண்ணை இமைபோல் காத்திடுவார்
கழுத்துக்குப் பலவாரம் தந்திடுவார்
குஞ்சி மயில்போல வட்டமிட்டு
கொஞ்சிக் குலாவி இருந்திடுவார்

4. ஊரும் உறவும் உறங்கிவிடும்
உந்திருந்து என்னைப் பார்த்திடுவார்
சத்தியமாகச் சொல்லுகிறேன்
உத்தமரல்லோ என் கணவர்

## பல்வகைப் பாடல்கள்

1. கட்டிக் கறந்த மாடு
கணுவடிக்கு வந்த மாடு
தட்டிச் சொறிஞ்ச மாடு
தலை எழுப்பிப் பார்க்குதில்ல

2. ஏத்தால வெள்ளாம
இளங்குடல பூஞ்சோல
மாட்டால அழியுதென்று அந்த
மன்னனிடம் சொல்லிவிடு

3. வந்தாரென்டால் ஓரழகு
வாசலெல்லாம் தங்க நிறம்
போட்டுத்துப் போனாரென்டால்
ஒரு பூப்பூத்து மடிந்ததுபோல்

4. கூட்டாளித் தோழே
குரக்கன் என்ன விற்குதடா
நான் அறியத் தோழே
நாலு பணம் விற்குதடா

5. போகாதே போகாதே என் கணவா
பொல்லாத சொப்பணம் வந்துவிடும்
சாகாமல் என்னோடு வாழுமையா - இந்த
சண்டையும் பேச்சையும் தள்ளுமையா

6. வெள்ள வெள்ள இடியப்பம்
வெழுமை கொண்ட தேங்காய்ப்பூ
கித்துள் பனங்கட்டி - அவர்
திண்பாரென்று கேள் பொடிச்சி

7. காட்டுக்கு கம்பினக்கம்
கலை மானுக்குக் கொம்பிணக்கம்
நாவுக்குத் தேனிணக்கம் - என்ட
நன்மதினிக்கு நானிணக்கம்

8. ஏத்தக் கரத்தை வண்டில்
ஒருகால் முறிஞ்ச வண்டில்
பட்டங் கழன்ற வண்டில் - எனக்குத்
தள்ளவொன்னா சங்கரரே

9. வெள்ளைக் கிடா நாம்பன்
வீசு கொம்பன் தாமரையான்
பள்ளத்து வெள்ளாமையைப்
பால் பறக்கத் தின்னுதல்லோ

10. கோலம் அழிவதற்கு
மானத்து ராசாவே
மேகத்து மந்திரியே - இந்நாட்டிலொரு
குளிர்ந்மலை பெய்துவிடு

***பயிற்சி***

*1. பாடல்களை இசையுடன் பாடிக் காட்டுக.*
*2. பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்களைக் கூறுக.*
*3. நாட்டார் பாடல்களின் ஆசிரியரைக் குறிப்பிட்டுக் கூற முடியாமல் போனமைக்கான காரணங்கள் யாதாக இருக்கலாம்?*
*4. பாடல்கள் வெளிப்படுத்தும் உட்கருத்தை எழுதிக்காட்டுக.*

# அறிக்கை

பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிக்கை எழுத வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அறிக்கை என்பது குறிப்பிட்ட விடயம் தொடர்பான தகவல்கள், தரவுகள், குறிப்புக்கள், கருத்துக்கள் என்பவற்றைத் திரட்டி ஆதாரபூர்வமாக எழுதப்படும் ஆவணம் ஆகும்.

நடைபெற்று முடிந்த நிகழ்வுகளுக்கு அறிக்கை எழுதப்படுவது போல, நடைபெறத் திட்டமிடப்படும் விடயங்களுக்காகவும் அறிக்கை எழுதப்படலாம். இவ்வறிக்கைகள் உண்மையாகவும், ஏற்புடையதாகவும் அமைய வேண்டும். அறிக்கை பல வகைகளில் அமையும், அவ்வவ் வகைகளுக்கேற்ப அறிக்கை எழுதும் முறைமையும் மாறுபடும்.

## அறிக்கையின் வகைகள்

*1. கூட்ட அறிக்கைகள்*

*அ. நிர்வாகக்கூட்ட அறிக்கை.*
*ஆ. பொதுக்கூட்ட அறிக்கை.*
*இ. சென்ற கூட்ட அறிக்கை.*

*2. ஆண்டறிக்கைகள்*

*3. வெளிக்கள அறிக்கைகள்*

*4. திட்டமிடல் சுற்றறிக்கைகள்*

*5. செய்தி அறிக்கைகள்*

*அ. வானொலி செய்தி அறிக்கை.*
*ஆ. தொலைக்காட்சி அறிக்கை.*
*இ. பத்திரிகைச் செய்தி அறிக்கை.*

## அறிக்கை எழுதும் படிமுறைகள்

*1. தகவல் திரட்டுதல் - வாசித்தல் - உசாவுதல், செவிமடுத்தல், செவ்வி காணல், அவதானித்தல் போன்ற முறைகளில் தகவல் திரட்டலாம். (இச்சந்தர்ப்பங்களில் குறிப்பெடுத்தலை கட்டாயம் செய்தல் வேண்டும்)*

2. தகவல்களை நிரற்படுத்தல் - முக்கிய அம்சங்களைத் தேர்ந்தெடுத்தல்.
3. அவற்றை ஒழுங்குபடுத்தி மறுபரிசீலனை செய்தல்.
4. அறிக்கை எழுதும் நோக்கத்திற்கேற்ப அவற்றைப் பந்தி பிரித்து வேண்டியவிடத்து உப தலைப்பு இடல்.
5. சுருக்கமாக, ஆனால் தெளிவாக தர்க்க ரீதியாக எழுதுதல்.
6. இறுதியில் வேண்டியவிடத்து தீர்வினைக் காட்டல்.

## அறிக்கை எழுதும் சில சந்தர்ப்பங்கள்

1. மன்றங்களில் வாசிக்கப்படும் கடந்த கூட்ட அறிக்கை.
2. பாடசாலை, சனசமூக நிறுவனங்களின் ஆண்டு அறிக்கை.
3. செயற்றிட்டம், நிகழ்வு, நிகழ்ச்சி பற்றி சமர்ப்பிக்கப்படும் விஷேட அறிக்கை.
4. பிரச்சினைகள், சூழ்நிலைகள், எதிர்பாராத சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கை.
5. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் கருமக்கூற்றுகள் பற்றித் திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை.

## அறிக்கை எழுதுவதனால் ஏற்படும் நன்மைகள்

1. கடந்த நிகழ்ச்சிகளைத் தொடர்பு படுத்துதலுக்காக அறியத் தருதல்.
2. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று பெற்ற வளர்ச்சியை அறிதல்.
3. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று நிலைநாட்டிய சாதனையைத் தெரியப்படுத்துதல்.
4. செயற்றிட்டம் ஒன்று எவ்வாறு, எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்பதை அறிதல்.
5. பிரச்சினைகள், சம்பவங்கள் பற்றிய காரணங்களை அறிதல்.
6. தரவுகளை இனங்காணல்.
7. எதிர்கால செயற்பாடுகளை துல்லியமாகத் திட்டமிடல்.

## அறிக்கைச் சட்டகம்

1. தலைப்பு

2. அறிமுகம்: என்ன விடயம் தொடர்பானது. சமர்ப்பிப்பவர் யார் ? என்பது பற்றிய மிகச் சிறு விளக்கம்.

3. இடம், காலம், நேரம்.

4. பிரதம விருந்தினர் : (யார் எவ்வாறான வரவேற்பு)

5. ஆரம்பம்: கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து

6. வரவேற்புரை: யாரால் என்பதைக் குறிப்பிடல்.

7. அதிபர் உரை:
- விருந்தினர் வரவேற்பு
- விழா, நிகழ்வு தொடர்பான விளக்கம், நோக்கம்
- பாடசாலையின் நிலைப்பாடு (வளர்ச்சி, விருத்தி)
- நிகழ்வு, திட்டத்தின் ஒழுங்கமைப்பு, வளர்ச்சிக்கு ஒத்துழைத்தவர் தொடர்பான விபரம், நன்றி.

8. நிகழ்வு / விடயம்
எந்த விடயமாயினும் அது தொடர்பில் இடம்பெற்ற விடயங்கள், படிமுறையாக எடுத்துரைத்தல்.

9. பிரதம அதிதியின் உரை
- கலை நிகழ்வு
- பாடசாலையின் பழைய நிலைமை
- இப்போதைய விருத்தி நிலைமை
- பங்களிப்புச் செய்தோர், ஒத்துழைத்தோர் போன்றோரைப் பாராட்டல், வாழ்த்துதல், பரிசளிப்பு.

10. நன்றியுரை:
- யார் என்பதைக் குறிப்பிடல்.

உதாரணம்: ஆசிரியர் , மாணவ தலைவர் , தலைவர் , ஒழுங்கமைப்பாளர் .

11. நிறைவு: முடிவுற்ற நேரம்

உதாரணம்: பாடசாலை கீதம், தேசிய கீதம், நன்றி தெரிவிப்பு.

## மாதிரி அறிக்கை

*தலைப்பு :- சது/ செந்நெல் ஸாஹிறா மகா வித்தியாலயத்தின் கலை விழா அறிக்கை.*

*அறிமுகம் :- கடந்த 2014.10.10 ஆந் திகதியன்று சது/செந்நெல் ஸாஹிறா மகா வித்தியாலயத்தில் நடந்தேறிய கலை விழா தொடர்பான அறிக்கையை அதன் செயலாளர் என்ற வகையில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*இடம் : சது/ செந்நெல் ஸாஹிறா மகா வித்தியாலய பிரதான மண்டபம்*

*காலம் : 2014.10.10 (வியாழக்கிழமை)*

*நேரம் : மு.ப 10.30 - பி.ப 2.30 வரை.*

*ஏற்கனவே திட்டமிட்டவாறு மு.ப 10.30 மணிக்கே நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. பிரதம அதிதியாக வருகை தந்த கலாநிதி மு. நல்லரெத்தினம் அவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார். ஆரம்ப நிகழ்வாக கடவுள் வாழ்த்தோடு தமிழ்த்தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து மாணவத்தலைவன் செல்வன் என். வடிவேல் வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*பாடசாலை அதிபர் எஸ்.அபூபக்கர் அவர்களின் உரை அடுத்து இடம் பெற்றது. பிரதம அதிதியவர்களை வரவேற்றுப் பேசிய அவர் இவ்வாறான கலை நிகழ்ச்சிகளே, கடந்த வருட தமிழ்த் தினப்போட்டிகளில் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல வெற்றிகளைப் பெற்றுத்தரக் காரணமாக இருந்ததோடு அதற்கு எமது ஆசிரியர் குழாத்தின் அயராத முயற்சியே துணை நின்றது என்பதைச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. தரம் 13ஐச் சேர்ந்த மாணவர்களால் மேடையேற்றப்பட்ட, அரிச்சந்திர புராணத்தை அடிப்படையாகக் கொண்ட சத்திய சோதனை என்ற நாடகம் சபையோரைப் பெரிதும் கவர்ந்தது,*

*கடந்த வருடம் அகில இலங்கை தமிழ் மொழித்தின பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் பிரிவு நான்கில் முதலிடம் பெற்ற செல்வி. ஸைனப் ஸஹா நிகழ்த்திய 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற மகுடத்திலமைந்த உரை அனைவர் உள்ளத்திலும் தாய் மொழிப் பற்றை ஊற்றெடுக்கச் செய்தது. அடுத்து 'காத்தவராயன் நாட்டுக்கூத்து, அசத்தப்போவது யாரு, நுளம்புகள் கவனம் நோய் வந்தால் மரணம் (நாட்டிய நாடகம்)' ஆகிய நிகழ்ச்சிகள் முறையே அரங்கேற்றப்பட்டன.*

பி.ப. 1.30 மணியளவில் பிரதம அதிதியின் உரை இடம்பெற்றது. அதில் அவர் கடந்த சில வருடங்களாக இப்பிரதேசத்தில் புகழ் வாய்ந்த ஒரு பாடசாலையாக வருடா வருடம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற ஒரு பாடசாலையாக இது மிளிரக் காரணம் இங்குள்ள அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளது அயராத முயற்சியும் ஒத்துழைப்பும் ஆகும் எனக்கூறினார். மேலும் க.பொ.த (சா.த) பரீட்சையிலும், உயர் தரப் பரீட்சையிலும் மாவட்ட மட்டத்தில் பிரகாசித்த மாணவர்களுக்கும், ஏனைய போட்டி நிகழ்ச்சிகளில் மாகாண, தேசிய மட்டத்தில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் தனது சொந்த நிதியிலிருந்து பரிசில்களை அள்ளி வழங்கினார் .

இறுதியாக பிரதி அதிபர் மு. அப்துல்லாஹ் அவர்களின் நன்றியுரையோடு பி.ப. 2.30 மணியளவில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதே நிறைவெய்தின.

நன்றி

செயலாளர்,

(ஒப்பம்) மு.ப. மிஸ்ஹல்
சது / செந்நெல் ஸாஹிறா மகா வித்தியாலய கலைவிழாக்குழு.
2014.11.30

**பயிற்சி**

1. கடந்த வருடம் உமது பாடசாலையில் நடைபெற்ற இலக்கிய மன்றம் தொடர்பான சென்ற கூட்டறிக்கையை 150 சொற்களுக்குள் எழுதுக.

2. வெளிக்கள அறிக்கை ஒன்றைத் தயாரிக்குக.

# புணரியல்

| | | |
|---|---|---|
| நாம் + கள் | → | நாங்கள் |
| உண் + ட் + ஆன் | → | உண்டான் |
| வேல் + எறிந்தான் | → | வேலெறிந்தான் |
| பூ + கொடி | → | பூங்கொடி |
| மார்கழி + திங்கள் | → | மார்கழித்திங்கள் |

மேலே தரப்பட்டுள்ள உதாரணங்களில் சொல்லின் உறுப்புகள் அல்லது, சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பொருள் உணர்த்துவதை அறிய முடிகின்றது. இவ்வாறு,

சொல்லின் உறுப்புகளோ சொற்களோ பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது புணர்ச்சி எனப்படும்.

## அகப்புணர்ச்சியும் புறப்புணர்ச்சியும்

### அகப்புணர்ச்சி

| | | |
|---|---|---|
| நாம் + கள் | → | நாங்கள் |
| உண் + ட் + ஆன் | → | உண்டான் |

இவ்வாறு சொல் உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.

பகுபதங்களில் இடம்பெறும் புணர்ச்சி விகாரங்கள் யாவும் அகப்புணர்ச்சிகளே ஆகும்.

### புறப்புணர்ச்சி

| | | |
|---|---|---|
| வேல் + எறிந்தான் | → | வேலெறிந்தான் |
| பூ + கொடி | → | பூங்கொடி |

மார்கழி + திங்கள் → மார்கழித்திங்கள்

கடல் + ஓரம் + வீடுகள் + அமைத்தல் + ஆகாது → கடலோரம் வீடுகளமைத்தலாகாது.

உதாரணங்களில் தரப்பட்டுள்ளவை போல், சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ வாக்கியமாகவோ அமைவது புறப் புணர்ச்சி ஆகும்.

★ தற்காலத்தில், புறப்புணர்ச்சியில் பெரும்பாலும் புணர்ச்சி விகாரங்கள் இன்றி எழுதப்படுகின்றன.

★ புறப்புணர்ச்சியின் போது, அவசியமான இடங்களில் மட்டுமே புணர்ச்சி விகாரங்கள் பேணப்படுகின்றன.

**பயிற்சி**

1. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

போவான், பறக்கின்றன, ஓடும், வருவார்கள், விளையாடினான், சொற்களால், ஏறினோம், இறைத்தன, பாடுகின்றது, வருகிறது.

2. பின்வருவனவற்றை புணர்த்தி எழுதுக.

நடி + கிறு + ஆன்
ஓடு + கிறு + அது
போ + ன் + அது
அ + ஞானம்

## இயல்புப் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- புணர்ச்சி
  - இயல்புப் புணர்ச்சி
  - விகாரப் புணர்ச்சி
    - தோன்றல் விகாரம்
    - கெடுதல் விகாரம்
    - திரிதல் விகாரம்

*பின்வரும் எடுத்துக்காட்டுகளை அவதானிப்போம்.*

*கல் + ஆல் → கல்லால்*
*மணி + ஓசை → மணியோசை*

*இவற்றின் மூலம் புணர்ச்சியில் குறைந்தது இரண்டு சொல் உறுப்புகளோ, சொற்களோ இடம் பெறுதல் வேண்டும் என்பதை அறிகின்றோம்.*

*புணர்ச்சியில் முதலில் இடம்பெறும் உறுப்பினை அல்லது, சொல்லினை நிலைமொழி எனவும் அதனைத் தொடர்ந்து வரும் உறுப்பினை அல்லது, சொல்லினை வருமொழி எனவும் அழைப்பர் .*

*கல் + ஆல்*
*நிலைமொழி வருமொழி*

*மணி + ஓசை*
*நிலைமொழி வருமொழி*

*இங்கு கல், மணி என்பவை நிலை மொழிகளாகவும் ஆல், ஓசை என்பவை வருமொழிகளாகவும் காணப்படுகின்றன.*

### இயல்புப் புணர்ச்சி

*மணி + பெரிது → மணிபெரிது*
*கலை + விழா → கலைவிழா*

இவ்விரு உதாரணங்களிலும் நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றிப் புணர்ந்துள்ளன. இதனை இயல்புப் புணர்ச்சி என்பர் .

தேன் + அருவி → தேனருவி
தொடர் + ஊர்ந்து → தொடரூந்து

இவைகளும் இயல்புப் புணர்ச்சிகளே. ஏனெனில், நிலை மொழியின் இறுதி மெய்யும் வருமொழியின் முதல் உயிரும் இணைந்து உயிர்மெய் என்கின்ற வரி வடிவம் பெற்றுள்ளதே தவிர, நிலைமொழி, வருமொழிகளில் உள்ள எழுத்துகள் எதுவும் கெடவோ, தோன்றவோ, திரியவோ இல்லை.

### விகாரப் புணர்ச்சி

விகாரப் புணர்ச்சி எனப்படுவது, சொற்களோ சொல்லுறுப்புகளோ புணரும்போது, நிலைமொழியிலோ வருமொழியிலோ ஏதாவதொரு மாற்றம் ஏற்படுவதாகும். இது 03 வகைப்படும்.

அ. தோன்றல் விகாரம்
ஆ. கெடுதல் விகாரம்
இ. திரிதல் விகாரம்

**அ. தோன்றல்**

கல் + ஆல் → கல் + ல் + ஆல் → கல்லால்
பூ + கொடி → பூ + ங் + கொடி → பூங்கொடி
வெளி + களம் → வெளி + க் + களம் → வெளிக்களம்

மேலே உள்ள உதாரணங்களில் ல், ங், க் எழுத்துகள் தோன்றியுள்ளதைக் காணலாம். நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது, ஓர் எழுத்து தோன்றுவது தோன்றல் விகாரம் எனப்படும்.

**ஆ. கெடுதல்**

சிறகு + ஆல் → சிறக்(உ) + ஆல் → சிறகால்
மனம் + வேதனை → மன + வேதனை → மனவேதனை

தரப்பட்டுள்ள உதாரணங்களில் உ, ம் எழுத்துக்கள் கெட்டுள்ளதை காணலாம். நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது, ஓர் எழுத்து இல்லாமல் போவது கெடுதல் விகாரம் எனப்படும்.

**இ. திரிதல்**

கல் + சிலை → கற் + சிலை → கற்சிலை
வாள் + படை → வாட் + படை → வாட்படை

நிலைமொழி இறுதி எழுத்துகளான ல், ள் என்பன ற், ட் ஆகத் திரிந்துள்ளன.

காண் + ட் + ஆன் → கண் + ட் + ஆன் → கண்டான்
செ + த்த் + ஆன் → செத் + த்த் + ஆன் → செத்தான்

மேலே தரப்பட்டுள்ள உதாரணங்களிலும் நிலைமொழி எழுத்துக்களான கா,சௌன்பன க, செ எனத் திரிந்துள்ளதை அவதானிக்கலாம்.

நிலை மொழியும் வருமொழியும் புணரும் போது, ஓர் எழுத்து இன்னொரு எழுத்தாக மாற்றமடைவது திரிதல் விகாரம் எனப்படும்.

**பயிற்சி**

1. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

மாமரம், கடலலை, வாளெடுத்தான், மாம்பழம், விலைப்பட்டியல், பொற்றாமரை, காற்சதங்கை, நீலவானம், வானக்கடல்.

2. பின்வரும் சொற்களில் இடம்பெறும் புணர்ச்சி எவ்வகையென இனங்கண்டு, அட்டவணையைப் பூர்த்தி செய்க.

வந்தான், மட்குடம், கோயிற்புறா, தாலாட்டுப்பாடல், பால்நிலா, கடற்புறம், மாங்கனி, நீலவானம், ஓடிப்போ, அந்தக்காலம், கலையரங்கம், கதவால், மரவேர், தேரோட்டி, உரவிலை, ஆள்வினை, தாகசாந்தி

| இயல்புப் புணர்ச்சி | விகாரப் புணர்ச்சி | | |
|---|---|---|---|
| | தோன்றல் விகாரம் | கெடுதல் விகாரம் | திரிதல் விகாரம் |
| | | | |
| | | | |

# அருஞ்சொற்றொடர்

எழுதும்போதும் பேசும்போதும் மொழியின் சீர்மையை மேம்படுத்தப் பயன்படுத்தும் சொற்றொடர்களே அருஞ்சொற்றொடர் எனப்படுகின்றது.

**உதாரணம்**

★ குறுகுறு நடந்து  சிறு கை நீட்டி

★ ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி

★ வழிமேல் விழிவைத்து

★ வைத்தகண் வாங்காமல் பார்த்துப் பார்த்து

**செயற்பாடு**

இவை போன்ற மொழி அழகும் வலிமையும் ஊட்டக்கூடிய அருஞ்சொற்களைத் தொகுத்து ஆக்கங்களில் பிரயோகிக்குக.